ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2059/32 - 2018 පෙබරවාරි මස 21 වැනි බදාදා - 2018.02.21

*2059/32 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

### மதுவரி அறிவித்தல் இல. 07/ 2018

**குடிபானமல்லாத ஸ்பிரித்தினை இறக்குமதி செய்வதற்கான மதுவரி**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 2 ஆம், 12 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான் :-

(அ) இறக்குமதி செய்யப்படுகின்ற குடிபானமல்லாத ஸ்பிரித்து தொகை கிலோ கிராம் ஒவ்வொன்றிற்கும் மதுவரித் தீர்வையாக ரூபா 6.00 இனை இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைவாக, 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் அறவிடப்படுதல் வேண்டும் எனவும்,

(ஆ) ஆயினும் எவ்வாறாயினும், ஏற்றுமதியினை நோக்கமாகக் கொண்டுள்ளதும் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் செய்துள்ளதும், இங்கு மதுவரி அறிவித்தலின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி உற்பத்திசெய்தும், மொத்த உற்பத்திப் பொருட்களில் 80% இற்கு குறையாத பொருட்கள் ஏற்றுமதி செய்கின்றதுமான தயாரிப்பு நிறுவனத்தின் ஏற்றுமதியினை இலங்கை முதலீட்டுச் சபைப் பணிப்பாளர் நாயகம் சான்றுபகர்வாரெனில் அதற்காக, மூலப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் பட்சத்தில் ஒவ்வொரு தொகை கி. கிராமிற்கும் ஒரு ரூபா ஐம்பது சதம் (1.50) என்ற வீதத்தில் மதுவரி ஒன்று 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் அறவிடப்படுதல் வேண்டும் எனவும்,

(இ) 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 9 ஆந் திகதிய 2044/33 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 999 மற்றும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 2050/ 11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 1005 என்பனவும் இரத்துச் செய்யப்படுகிறது எனவும்,

மேற்குறித்த கட்டளையின் கீழான ஒழுங்குவிதிகளைப் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர,  
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,  
கொழும்பு 01,  
2018, பெப்புருவரி 21.

1A - PG 3922 — 582 (2018/02)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** VI

*NSP-04*

படிவம் III

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

இறக்குமதி செய்யப்பட்ட குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களைக் கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரம்

1. உரிமப்பத்திரதாரரின் பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

தொலைபேசி இல. :..........................................................................

மின்னஞ்சல் :..........................................................................

2. வாகன சாரதியின் பெயர் :..........................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................

3. ஸ்பிரித்துக்கள் கொண்டுசெல்லப்படும் இடத்தின் பெயர் மற்றும் முகவரி :..........................................................................

..........................................................................

..........................................................................

4. குடிபானமல்லாத ஸ்பிரித்து வகை :..........................................................................

5. அளவு (தொகை கிலோ கிராம்) :..........................................................................

6. செறிவு :..........................................................................

7. செல்வழி :..........................................................................

8. செல்லுபடியாகும் காலம் :........................................ முதல் ........................................ வரை

9. வேறு விடயங்கள் :..........................................................................

10. திகதி :..........................................................................

11. வேறேதும் நிபந்தனைகள் இருப்பின்,

..........................................................................

..........................................................................

மேற்குறித்த குடிபானமல்லாத ஸ்பிரித்து வகைகளைக் கொண்டுசெல்வதற்காக மதுவரி நிபந்தனைகளின்கீழ் அங்கீகாரம் வழங்குகிறேன்.

------------------------------------------,
அதிகாரம்பெற்ற மதுவரி உத்தியோகத்தர்.

திகதி :----.

*03-384*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.